



# யானைமலை

இம்மலை பார்ப்பதற்கு யானை ஒன்று துதிக்கையை முன்னால் நீட்டி வாலைப்பின்னால் நீட்டிப் படுத்திருப்பது போலத் தோன்றும். தனது தோற்றத்தாலேயே யானைமலை எனப்பெயர் பெற்றுள்ளது. இயற்கையாகவே யானை போன்ற தோற்றத்துடன் விளங்கும் இம்மலை தன்னகத்தே பல அரிய வரலாற்றுச் சுவடுகளைத் கொண்டுள்ளது. இது வெறும் கல் அல்ல. மதுரை மக்களின் சமய நம்பிக்கையின் அடையாளம். சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டு.

**சமணர் குகைகள்**

மலையின்மேல் யானையின் மத்தகம் போல் தோன்றும் பகுதியில் ஓர் இயற்கையான குகை உள்ளது. அதனுள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சமணத்துறவிகள் தங்கிய கற்படுக்கைகள் உள்ளன. இங்கு சமணத்துறவிகள் தங்குவதற்கு உறைவிடம் அமைத்துக கொடுத்ததை இங்குள்ள பிராமி கல்வெட்டு தெரிவிக்கிறது.

“இவகுன்றத்துா உறையுள் பாதந்தான் ஏரி ஆரிதன் அத்துவாயி அரட்டகாயிபன்”

என்பது இக்கல்வெட்டு வாசகமாகும். கல்வெட்டில் வரும் ‘இவம்‘ என்ற பிராகிருதமொழிச் சொல்லுக்கு யானை என்று பொருள். எனவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகயிருந்து இம்மலை இப்பெயரைப் பெற்றுள்ளது. ஏரிஆரிதன் அத்துவாயி அரட்டகாயிபன் என்பவர்களின் பெயர்களை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. தமிழ் எழுத்துக்களில் மெய்யெழுத்துக்களுக்கு முதலில் புள்ளி வைக்காமல் எழுதினர். புள்ளிவைத்து எழுதப்பட்ட முதல் தமிழ்பிராமி கல்வெட்டு இம்மலையில் தான் உள்ளது.

**சமணர் சிற்பங்கள்**

லாடன்கோவிலுக்குத் தெற்கே உயரமான இடத்திலுள்ள இயற்கையான குகைத்தளத்தின் முகப்பில் காணப்படும் சமணர் சிற்பத் தொகுதி, சிற்பக்கலைக்கும், ஓவியக்கலைக்கும் ஒப்பில்லாச் சான்றாய் ஒளிர்கிறது.

சமண சமயத்தின் புகழ்மிக்க தீர்த்தங்கரரான மகாவீரர், அவருக்கு முந்தைய 23 ஆம் தீர்த்தங்கரர் பார்சுவநாதர், ஆதிநாதத் தீர்த்தங்கரர் மகன் பாகுபலி எனப்படும் கோமதீஸ்வரர், அம்பிகா இயக்கி எனும் பெண்தெய்வம் எனப்பல சிற்பங்களைக் கொண்டுள்ளது ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் இதனை வடிக்கக் காரணமாக இருந்தவர்களின் ஊர்ப்பெயர், நாடு, பதவி போன்ற தகவல்கள் கல்வெட்டுகளாய் மிளிர்கின்றன. அச்சணந்தி எனும் துறவியின் அருமுயற்சியால் இவையெல்லாம் சாத்தியமாயுள்ளன. அவர் சைவ வைணவ சமயத்தவரையும் சமணத்தின்பால் ஈர்த்துள்ளார். இவ்வூரின் பழம்பெயர் நரசிங்கமங்கலம் என்பது. பெரிதும் பிராமணர்கள் வாழ்ந்த இவ்வூரில் அவர்களே இச்சமணச்சிற்பங்களைப் பாதுகாப்பதாக உறுதி ஏற்றுள்ளனர் என்பதைக் கல்வெட்டில் காணலாம். இன்று நாம் விரும்பும் சமய நல்லிணக்கம் அன்றே சுமார் 1100 அண்டுகட்கு முன்பே மதுரையில் மலர்ந்திருந்துது என்பதற்கு இவையே சான்றுகள். மக்கள் மட்டுமல்ல, புரவுவரித் திணைக்களத்தார் என்னும் வருவாய்த்துறை அலுவலர்களும் இவற்றைப் பாதுகாத்துள்ளனர்.

இச்சிற்பங்களின் மேல் பல வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. இவை மஞ்சள், பச்சை, கருப்பு, சிவப்பு எனப் பல இயற்கை வண்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் இன்றும் சிதையாமல் உள்ளன. குத்துவிளக்குகள், சாமரங்கள், செடிகொடிகள் போன்றவை வண்ணங்களில் பொலிகின்றன.

மருத்துவப் பணி சமணத்துறவிகளால் மக்களுக்கு வழங்கப்பட்டதன் அடையாளமாக மருந்து அரைக்கும் கல் ஒன்றும் பாறைத்தளத்தில் காணப்படுகிறது.



**நரசிம்மர் குடைவரைக்கோவில்**

யானைமலை நரசிங்கபெருமாள் குடைவரைக்கோவில் எல்லோரது கவனத்தையும் ஈர்ப்பதாகும். கல்லைப் பிசைந்து கனியாக்கி அதனையும் கடவுளாக்கி கண்ட மதுரைத் தமிழனின் கைவண்ணம் இங்கே சாட்சியாகவுள்ளது. யோக நரசிம்மர் அமர்ந்த நிலையில் அருள்பாலிக்கிறார். இக்கோவில் எப்போது யாரால் குடைவிக்கப்பட்டது என்பதனைச் சொல்லும் இரண்டு கல்வெட்டுகள் இதன் கருவறை வாயிலின் இருபுறமும் வெட்டப்பட்டுள்ளன. கி.பி.770ல் தோற்றுவிக்கப்பட்ட இக்கோவிலில் வட்டெழுத்திலும், கிரந்த எழுத்திலும் கல்வெட்டுக்களைப் பொறித்துள்ளனர். தமிழ்நாட்டில் கலி ஆண்டு குறிப்பிடப்பட்ட பழமையான கல்வெட்டு இதுவாகும்.

இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உக்கிரன்கோட்டை என்ற சிற்றூர் அந்நாளில் கரவந்தபுரம் எனப்பெயர் பெற்றிருந்தது. அங்கு பிறந்து மதுரை பாண்டிய மன்னன் ஜடிலபராந்தக நெடுஞ்சடையன் எனப்பட்ட முதலாம் வரகுணபாண்டியனின் அமைச்சனாகப் பணியாற்றியவன் வைத்தியகுலத்தோன்றல் மாறங்காரி ஆவான். அவன் இக்குடைவரையை அமைக்கத்துவங்கி முற்றுப்பெறா முன்னர் இயற்கை எய்திவிட்டான். பின்னர் அவனது தம்பி மாறன் எயினன் முதல் அமைச்சராகி இப்பணியைத் தொடர்ந்து முடித்து குடமுழுக்கும் நிகழ்த்தினான் என்பதை இக்கல்வெட்டுகள் இரண்டும் சான்றுகாட்டி நிற்கின்றன. இங்குள்ள பிற கல்வெட்டுகளில் இக்கோவில் இறைவன் யானைமலை வீற்றிருந்த ஆழ்வார் எனஅழைக்கப்படுகிறார்.

கி.பி. 910 ஆம் ஆண்டில் பாண்டிய நாட்டை குறிப்பாக மதுரையைப் பராந்தகன் என்னும் சோழன் படையெடுத்துவந்து வென்றான். அவன் காலத்தில் இதன் வழிபாட்டுக்காவும், அணையாவிளக்கிற்காகவும், ஐந்து பிராமணர்கள் வேதம் படிக்கவும் கொடைகள் கொடுக்கப்பட்டன என்பதை இதே கோவிலின் மலைப்பகுதியில் கிழக்குச் சரிவில் ஒரு கல்வெட்டில் காணலாம். வட்டெழுத்தில் உள்ள இக்கல்வெட்டு சோழனின் அதிகார எல்லை பாண்டியநாடு வரை பரவியிருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது.

**லாடன்கோவில்**

நரசிம்மர் குடைவரையின் தெற்கே மேற்குத் திசைநோக்கி மற்றுமொரு குடைவரைகோவில் உள்ளது. இது முருகனுக்காக எடுக்கப்பட்ட கோவில் தமிழ்நாட்டில் முருகனுக்காக அமைந்த பழமையான குடைவரைகோவில் இதுவாகும். லாட தேசத்திலிருந்து இங்குவந்து தங்கி வழிப்பட்ட ஒரு துறவியின் பெயரால் இக்கோவில் இன்று மக்களால் லாடன்கோவில் என அழைக்கப்படுகிறது. இன்றைய குஜராத் பகுதியே அன்றைய லாடதேசமாகும்.

இக்கோவில் கருவறையில் முருகன், தேவசேனாவுடன் புதுமணமக்கள் போல பொலிவாக அமர்ந்துள்ளனர். முன்மண்டப சுவரில் சேவலும் மயிலும் புடைப்புருவங்களாக உள்ளன. பறக்கும் பூதகணங்கள் கோவில் கூரையைத் தாங்குகின்றன. துறவியரும், குடைவரையைச் செய்திட்ட மன்னவனும் சிற்பங்களாக இங்கு வடிக்கப்பட்டுள்ளனர். முன்மண்டப தூண்களிலே மலர்ந்த தாமரைகள், தரங்கபோதிகை எனும் அலைபோதிகைகள் உத்திரத்தைத்தாங்கி நிற்கின்றன.களிற்று முகப்படிகள் அதன்மேடையின் நடுவில் துறவி ஒருவரின் உருவம் உள்ளது,இக்கோவிலை உருவாக்கியவர் பற்றி ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டு கிழக்குச் சுவரில் மங்கலாக காணப்படுகிறது.

ஶ்ரீஸ்த்து புல்லாரி வட்டக்குறிச்சி நம்பிரான்
பட்டசோமயாஜி பரிவிராஜகர் புதுக்கு

என்று அக்கல்வெட்டு கூறுகிறது. பரிவிராஜகர் என்றால் அலைந்து திரியும் துறவி எனப்பொருள். அவர்தான் இக்கோவிலைப் புரனமைத்துள்ளார். இதுவும் 1200 ஆண்டுகட்கு முற்பட்டகோவில் என்பதைச் சிற்பங்களும் கல்வெட்டுகளும் பறைசாற்றுகின்றன.